**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR BLACK GRANITE QUARRY OF M/S GTP GRANITE LTD., S.F. NO. 1015/1A, 1015/1B, 1015/1C, 1015/2A, 1015/2B, 1015/2C, 1015/3A & 1015/3B, BARGUR VILLAGE, ANTHIYUR TALUK, ERODE DISTRICT & M/S O.ULAGANATHAN GRANITE QUARRY, S.F NO. 1023/3, BARGUR B VILLAGE, ANTHIYUR TALUK, ERODE DISTRICT ON 19.12.2020 at 10.30 AM AT GOVERNMENT HIGH SCHOOL, THAMARAIKARAI, ANTHIYUR TALUK, ERODE DISTRICT, TAMIL NADU**

As per the Amendment in the EIA Notification, 2006 vide S.O No. 1533(E) dated: 14.09.2006, the proposed unit of M/S GTP Granite LTD., S.F. No. 1015/1A, 1015/1B, 1015/1C, 1015/2A, 1015/2B, 1015/2C, 1015/3A & 1015/3B, Bargur Village, Anthiyur Taluk, Erode District & M/s O.Ulaganathan Granite Quarry, S.F No. 1023/3, Bargur B Village, Anthiyur Taluk, Erode District comes under Category "B" as the total area of the proposed granite quarries exceeds 5 Hectares and located as a cluster within 500m radial distance and thus requires public hearing. Hence public hearing was conducted on 19.12.2020 for this proposed granite quarries following the mandatory procedures.

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr.C. Kathiravan, IAS | : | District Magistrate/ District Collector,<br>Erode,<br>Erode District, Tamil Nadu |
| 2. | Mr.G. Udhayakumar | : | District Environmental Engineer (DEE),<br>Tamil Nadu Pollution Control Board (TNPCB),<br>Perundurai, Erode District. |
| 4. | Mr.Jeyaraman, | : | Revenue Divisional Officer,<br>Gobichettipalayam |
| 3. | Dr. N. Rajkumar | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Perundurai, Erode District. |
| 4 | Mr.C. Muthuraj | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Perundurai, Erode District. |
| 5. | Mr.O.Ulaganathan | | The Proprietor,<br>M/s O.Ulaganathan Granite Quarry |
| 6. | Mr.O.Thiyagarajan | | Incharge,<br>M/s O.Ulaganathan Granite Quarry |
| 7. | Mr.P.Sentil Kannan | | Manager (Geologist),<br>M/s O.Ulaganathan Granite Quarry |
| 8. | Mr.R.Rathinam | | Quarry Manager,<br>M/s GTP Granite Ltd., |
| 9. | Mr.Thangaraj | : | Quarry Consultant,<br>M/s GeoExploration and Mining Solutions,<br>Salem. |

**Besides, the public hearing was attended by 89 persons (Copy of Attendance is enclosed).**

1. The District Environmental Engineer (DEE), Tamilnadu Pollution Control Board, Perundurai, Erode District welcomed the gathering. In his welcome address, the DEE, TNPCB, Perundurai has requested the public present to air their views regarding the environmental impact of the

proposed granite quarries. He has also informed the public that their views can also be furnished in written form in the meeting.

2. The District Magistrate/ District Collector, Erode District has explained the need for conducting the public hearing. He has also informed the public to speak about the expected environmental impact of the proposed project. He has informed that the Proceeding of the meeting and the views of the public will be recorded in the form of minutes and will be submitted to the Government.

3. The DEE, TNPCB, Perundurai has requested the Project consultant, M/s Geo Exploration and Mining Solutions, Salem, to make a detailed technical presentation on the proposed granite quarries in cluster, incorporating all the mandatory requirements.

   Subsequently, the project consultant has given a detailed power point presentation in Tamil language.

4. At the end of the power point presentation, the DEE, TNPCB, Perundurai has requested the willing public to speak one by one.

5. Mr.B.J.Devaraj, Bejalatti, residing in the vicinity of the proposed quarry area has informed that the granite quarry owners have not helped the local public. He complained that the granite quarry owners have taken granite blocks from the Government Poromboke land as well during their earlier quarry operations. He added that the granite quarry owners have not given job opportunities to the local people. He informed that wild animals are present near the proposed granite quarries and will be affected if permission is given for quarrying. He requested the District Collector, Erode District to not give permission for the proposed granite quarries in that area.

6. Mr.M.Kuttappan, Bejalatti informed that four granite quarries located in the cluster have not supported the local public in any aspect. He requested the District Collector to inspect the Bejalatti and the present living condition of the public residing in that area. He said that if permission is given for the proposed granite quarries, it will affect the entire 300 families living in Bejalatti. He requested the District Collector, Erode District to not recommend for the proposed granite quarries in that area.

7. Mr.B.J.Devaraj, Bejalatti, again informed that the granite quarry owners of the proposed granite quarries which were in existence have signed lease deed with land owners stating that the lands will be returned to the land owners after cutting and removal of the granite blocks from their lands. However they have not returned the lands as committed. He submitted a copy of agreement to the District Collector, Erode as a supporting document.

8. Mr.B.J.Devaraj, Bejalatti, informed that the local public are unaware of the public hearing and hence many persons are not attending the public hearing.

9. The DEE, TNPCB, Perundurai informed that the Public Notices in Tamil & English regarding the proposed public hearing were given in the English and Tamil dailies Indian Express and Dinamani on 07.11.2020. The details of proposed granite quarries along with the Draft Environmental Impact Assessment Report and Executive Summary of the project were placed in various locations including the Bargur Panchayat Office as mandated by the EIA Notification, 2006.

10. The District Collector, Erode has informed the public that the DEE, TNPCB, Perundurai will receive the written petitions from the public on 21.12.2020 in the public hearing venue i.e. at Government High School, Thamaraikarai and requested the public to submit their written petitions in person on 21.12.2020.

11. Mr.O.Ulaganathan, the Proprietor of M/s O.Ulaganathan Granite Quarry informed that the granite quarries are in existence in Bargur for past two generations. He has said that the quarries are not in operation for more than a decade and assured that necessary support will be extended to the local public if permission is given for the proposed quarries.
12. Mr.R.Rathinam, Manager, M/s GTP Granites Ltd., said that so far only land development activities were carried out in their granite mines. Adding to his views Mr.Thangaraj, Consultant, M/s Geo Exploration and Mining Solutions, Salem also said that only fractured granitic rocks are noticed in the quarry of M/s GTP Granite Ltd., and can be verified through Mines Department. He has informed that blasting techniques were used earlier whereas at present wire saw cutting methods are adopted to reduce the impact on the Environment. He has informed that the proposed granite quarries will spend their 2% of their profit for the infrastructural development activities under Corporate Social Responsibility (CSR) scheme.
13. Mr.M.Kuttappan, Bejalatti, said that the manager of M/s GTP Granite Ltd., has long back informed that his management will extend financial support for the construction of temple in Bejalatti, however no progress has been shown by their management.
14. Mr.Rathinam, the Manager of M/s GTP Granite Ltd., informed that as the quarry is not in operation, they are not in a position to help the local public.
15. The District Collector, Erode informed that the quarry owners have to pay their attention in improving the living condition of the local public. He has assured to visit the Bejalatti Village in a week's time.
16. The DEE, TNPCB, Perundurai has informed that as per the instructions of the District Collector, Erode the officials of TNPCB will receive the written views of the public on 21.12.2020 morning 10.00 am at Government High School, Thamaraikarai.

The Public hearing went off smoothly and came to an end with the vote of thanks of the DEE, TNPCB, Perundurai.

**Enclosures:**

1. Copy of Public Notice published in the Tamil & English dailies dated 07.11.2020.
2. Copy of attendance sheet of the public hearing (Total 10 pages)
3. Copy of Audio & Video (DVD – Disc 1) of the public hearing.
4. Copy of photographs of the public hearing.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, Project Report submitted by the Project Proponent.
6. 1 No. of petition received on 19.12.2020 & 14 Nos. of petitions received on 21.12.2020. (Favouring the project - 9 Nos. & Against the project - 6 Nos).

19.12.2020

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Perundurai, Erode District

District Magistrate / District Collector,
Erode District

**ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், பர்கூர் கிராமம், க.ச.எண். 1015/1 A, 1015/1B, 1015/1C, 1015/2A, 1015/2B, 1015/2C, 1015/3A & 1015/3B ல், தி/ள். ஜி.டி.பி கிரானைட் லிமிடெட் மற்றும் ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், பர்கூர் பி கிராமம், க.ச.எண். 1023/3 ல், தி/ள். ஓ. உலகநாதன் கிரானைட் குவாரி 5.10.5 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள கருப்பு வண்ண கிரானைட் சுரங்கங்கள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 19.12.2020 அன்று ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், தாமரைக்கரை அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை விவரங்கள்.**

தி/ள். ஜி.டி.பி கிரானைட் லிமிடெட், க.ச.எண். 1015/1 A, 1015/1B, 1015/1C, 1015/2A, 1015/2B, 1015/2C, 1015/3A & 1015/3B, பர்கூர் கிராமம், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் மற்றும் தி/ள். ஓ. உலகநாதன் கிரானைட் குவாரி. க.ச. எண்.1023/3 ல், பர்கூர் பி கிராமம், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் ஆகிய உத்தேசிக்கப்பட்டுள்ள கருப்பு வண்ண கிரானைட் சுரங்கங்கள் 5 ஹெக்டேர்க்கும் அதிகமான பரப்பளவில் உள்ளதாலும், 500 மீட்டர் ஆர சுற்றளவிற்குள் அமைந்துள்ளதால் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அறிவிப்பு திருத்தத்தின் S.O.No.1533 (E) நாள் 14.09.2006 ன்படி, 'B' வகையில் அமைவதால் கட்டாயம் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்த பெறுதல் வேண்டும். எனவே பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் 19.12.2020 அன்று பின்வரும் நடைமுறைகளின்படி நடத்தப்பட்டது.

**கலந்து கொண்டவர்கள் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. சி. கதிரவன், இ.ஆ.ப | மாவட்ட ஆட்சித் தலைவர்,<br>ஈரோடு மாவட்டம் |
| 2. | திரு. கோ. உதயகுமார் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>பெருந்துறை |
| 3. | திரு. ஜெயராமன் | வருவாய் கோட்ட அலுவலர்,<br>கோபிசெட்டிபாளையம் |
| 4. | முனைவர். நா. ராஜ்குமார் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>பெருந்துறை |
| 5. | திரு. செ. முத்துராஜ் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>பெருந்துறை |
| 6. | திரு. O. உலகநாதன் | உரிமையாளர்,<br>தி/ள். ஓ. உலகநாதன் கிரானைட் குவாரி |
| 7. | திரு. O. தியாகராஜன் | பொறுப்பாளர்,<br>தி/ள். ஓ. உலகநாதன் கிரானைட் குவாரி |
| 8. | திரு. P. செந்தில் கண்ணன் | மேலாளர் (புவியியல் வல்லுநர்)<br>தி/ள். ஓ. உலகநாதன் கிரானைட் குவாரி |

| | | |
|---|---|---|
| 9. | திரு. R. ரத்தினம் | சுரங்க மேலாளர்<br>தி/ள். ஜி.டி.பி கிரானைட் லிமிடெட் |
| 10. | திரு. தங்கராஜ் | சுரங்கங்களின் திட்ட ஆலோசகர்<br>தி/ள். ஜியோ எக்ஸ்ப்ளோரேஷன் அன்டு மைனிங் சொலுஷன்ஸ், சேலம். |

தவிர, 89 பொது மக்கள் கலந்து கொண்டனர் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

1. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெருந்துறை அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை வரவேற்றார். மேலும், அவர் தன் வரவேற்புரையில் உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் சுரங்கங்கள் அமைவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து பொது மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும், பொது மக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்து வடிவிலும் தெரிவிக்கலாம் என்று கூறினார்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவதன் அவசியத்தை பற்றி விளக்கினார். அவர் பொதுமக்களை மேற்கண்ட உத்தேசிக்கப்ட்டுள்ள கருப்பு கிரானைட் சுரங்கங்கள் அமைவதால் எதிர்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து பேசவும் அறிவுறுத்தினார். அவ்வாறு தெரிவிக்கப்படும் பொது மக்களின் கருத்துகள் மற்றும் கூட்டத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் கூட்ட நடவடிக்கையாக பதிவு செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
3. மாவட்ட சுற்றுச்சூழல் பெறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெருந்துறை அவர்கள் மேற்கண்ட கிரானைட் சுரங்கங்கள் அமைப்பதற்கான விரிவான விளக்கக்காட்சியை வழங்குமாறு திட்ட ஆலோசகர், தி/ள். ஜியோ எக்ஸ்ப்ளோரேஷன் அன்டு மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்களை கேட்டுக் கொண்டார்.
   பின்னர், திட்ட ஆலோசகர் உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் சுரங்கங்கள் அமைப்பது குறித்து தமிழ் மொழியில் விரிவான விளக்கக்காட்சியுடன் (Power Point Presentation) எடுத்துரைத்தார்.
4. விளக்கக்காட்சியின் முடிவில், பொதுமக்கள் ஒவ்வொருவராக தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு மாவட்ட சுற்றுச்சூழல் பெறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெருந்துறை அவர்கள் கேட்டுக் கொண்டார்.
5. திரு. B.J. தேவராஜ், பெஜலட்டி, உத்தேசிக்கப்பட்டுள்ள சுரங்க பகுதிகளுக்கு அருகில் வசிப்பவர், மேற்கண்ட கிரானைட் சுரங்கங்களின் உரிமையாளர்கள் உள்ளூர் மக்களுக்கு உதவவில்லை என்று தெரிவித்தார். சுரங்க உரிமையாளர்கள் முந்தைய சுரங்க நடவடிக்கையின்போது அரசுக்கு சொந்தமான நிலத்திலிருந்தும், கிரானைட் கற்களை வெட்டி எடுத்ததுள்ளதாக புகார் கூறினார். கிரானைட் சுரங்க உரிமையாளர்கள் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கவில்லை என்றும், உத்தேசிக்கப்பட்ட கிரானைட் சுரங்கங்களுக்கு அருகில் வன விலங்குகள்

இருப்பதாகவும், சுரங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டால் அவை பாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். எனவே, அந்த பகுதியில் உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் சுரங்கங்களுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

6. திரு. M. குட்டப்பன், பெஜலட்டி அவர்கள் கிளஸ்டரில் (Cluster) அமைந்துள்ள நான்கு கிரானைட் சுரங்கங்களும் உள்ளூர் மக்களுக்கு எந்த வகையிலும் ஆதரவு அளிக்கவில்லை என்று தெரிவித்தார். பெஜலட்டி மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் தற்போதைய வாழ்க்கை நிலையை நேரில் வந்து ஆய்வு மேற்கொள்ளுமாறு அவர் மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களிடம் கேட்டுக் கொண்டார். உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் சுரங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டால் அது பெஜலட்டி கிராமத்தில் வாழும் 300 குடும்பங்களையும் பாதிக்க வாய்ப்புள்ளதால் அந்த பகுதியில் உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் சுரங்கங்கள் அமைய பரிந்துரைக்க வேண்டாம் என்று மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

7. திரு. B.J. தேவராஜ், பெஜலட்டி அவர்கள் கிரானைட் சுரங்க உரிமையாளர்கள் அப்பகுதி மக்களிடம் அவர்களின் நிலத்தில் உள்ள கற்களை வெட்டி எடுத்தபின்னர் நிலத்தை நில உரிமையாளர்களிடம் திரும்ப ஒப்படைப்பதாக குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு இதுவரை அந்த நிலங்களை ஒப்படைக்கவில்லை என்று தெரிவித்தார். ஆதாரமாக குத்தகை ஒப்பந்த நகலை மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பித்தார்.

8. மேலும், திரு. திரு. B.J. தேவராஜ், பெஜலட்டி அவர்கள் தற்சமயம் நடைபெறும் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் பெஜலட்டி பகுதியில் வசிக்கும் பொது மக்கள் பலருக்கும் தெரியப்படுத்தப்படவில்லை அதனால் அவர்களால் இக்கூட்டத்தில் பெருமளவு கலந்து கொள்ள முடியவில்லை என்று தெரிவித்தார்.

9. மாவட்ட சுற்றுச்சூழல் பெறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெருந்துறை அவர்கள் உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் சுரங்கங்கள் தொடர்பாக பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் அரசு உயர்நிலை பள்ளி, தாமரைக்கரையில் 19.12.2020 அன்று நடைபெறும் என்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் 07/11/2020 அன்று தி இந்தியன் எக்ஸ்ப்ரஸ் மற்றும் தினமனி நாளிதழ்களில் பொது அறிவிப்பு வெளியிடப்பட்டு அது தொடர்புடைய திட்டச் சுருக்கம் பர்கூர் கிராம பஞ்சாயத்து அலுவலகம் உட்பட அரசு அலுவலகங்களில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது என்று தெரிவித்தார்.

10. மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்கள் அங்கிருந்த மக்களிடையே உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் தொடர்புடைய மனுக்களை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களிடம் 21.12.2020 அன்று காலை 10.00 மணிக்கு கருத்துக் கேட்பு கூட்ட நடைபெறும் அதே பள்ளி வளாகத்தில் வந்து நேரிடையாக ஒப்படைக்கலாம் என்று தெரிவித்தார்.

11. தி/ள். ஒ. உலகநாதன் கிரானைட் சுரங்க உரிமையாளர், திரு. ஒ. உலகநாதன் அவர்கள் பெஜலட்டி பகுதியில் கடந்த இரு தலைமுறைகளாக கிரானைட் சுரங்கங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அந்த சுரங்கள் இயக்கத்தில் இல்லை என்று தெரிவித்தார். தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள சுரங்க திட்டங்களுக்கு அனுமதி அளித்தால் அப்பகுதி மக்களுக்கு தேவையான உதவிகளை செய்ய உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்தார்.

12. திரு. R ரத்தினம், சுரங்க மேலாளர், தி/ள். ஜி.டி.பி கிரானைட் லிமிடெட் அவர்கள் இதுவரை தங்களின் கிரானைட் சுரங்கங்களில் நில மேம்பாட்டு நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன என்று கூறினார். இத்துடன், திரு. தங்கராஜ், சுரங்க திட்ட ஆலோசகர், தி/ள். ஜியோ எக்ஸ்ப்ளோரேஷன் அன்டு மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் தி/ள். ஜி.டி.பி கிரானைட் லிமிடெட் சுரங்கத்தில் முன்பு இயங்கியபோது விரிசலுடன் கூடிய கிரானைட் பாறைகள் மட்டுமே காணப்பட்டது என்றும் சுரங்கத் துறை மூலம் இதனை உறுதிபடுத்திக் கொள்ளலாம் என்றும் தனது கருத்துக்களைக் கூறினார். வெடிகளை பயன்படுத்தி கிரானைட் வெட்டி எடுக்கும் தொழில்நுட்பங்கள் முன்னர் பயன்படுத்தப்பட்டதாகவும், தற்போது சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்காக கம்பி இழைகள் கொண்டு பாறைகளை அறுக்கும் முறைகள் பின்பற்றப்படுவதாக அவர் தெரிவித்தார். உத்தேசிக்கப்பட்டுள்ள கிரானைட் சுரங்கங்கள் தங்களது லாபத்திலிருந்து 2 சதவீத தொகையை கார்ப்பரேட் சோஸியல் ரெஸ்பான்ஸ்பிளிட்டி (Corporate Social Responsibility scheme- CSR) திட்டத்தின் கீழ் அப்பகுதியில் உள்ள கிராமத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்த பயன்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

13. திரு. M. குட்டப்பன், பெஜலட்டி அவர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே பெஜலட்டி கிராமத்தில் கோவில் கட்டுவதற்கு நிதி உதவி வழங்குவதாக தி/ள். ஜி.டி.பி கிரானைட் லிமிடெட் சுரங்கத்தின் மேலாளர் தெரிவித்திருந்ததாகவும், ஆனால் அவர்கள் நிர்வாகம் எவ்வித உதவியும் இதுவரை செய்யவில்லை என்றும் கூறினார்.

14. திரு. R ரத்தினம், சுரங்க மேலாளர், தி/ள். ஜி.டி.பி கிரானைட் லிமிடெட் அவர்கள் சுரங்கம் செயல்படாமல் இருப்பதால் அங்குள்ள பொது மக்களுக்கு தேவையான உதவிகளை செய்ய இயலவில்லை என்று தெரிவித்தார்.

15. மாவட்ட ஆட்சி தலைவர், ஈரோடு அவர்கள் கிரானைட் சுரங்க உரிமையாளரிடம் அருகாமையில் உள்ள பொது மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு தேவையான உதவிகளை வழங்க வேண்டும் என்று தெரிவித்தார். மேலும் ஒரு வார காலத்திற்குள் பெஜலட்டி கிராமத்தில் ஆய்வு மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

16. மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி 21.12.2020 அன்று காலை 10.00 மணியளவில் பொதுமக்களின் கருத்துக்களை எழுத்து வடிவில் அரசு உயர்நிலை பள்ளி, தாமரைக்கரையில் நேரில் வந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள்

பெறுக்கொள்வார்கள் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பெறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெருந்துறை அவர்கள் தெரிவித்தார்.

பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் அமைதியாக நடைபெற்று, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெருந்துறை அவர்களது நன்றியுரையுடன் முடிவடைந்தது.

**<u>இணைப்பு</u>**

1. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் 07.11.2020 அன்று வெளியிடப்பட்ட பொது அறிவிப்பு.
2. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்த பொது மக்களின் வருகை பதிவேடு.
3. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பதிவு (DVD)
4. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.
5. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை (EIA), தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நிறைவேற்று சுருக்கம், திட்ட உரிமையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட அறிக்கை
6. 19.12.2020 அன்று பெறப்பட்ட ஒரு மனு மற்றும் 21.12.2020 அன்று பெறப்பட்ட 14 மனுக்கள் (திட்டத்தை வரவேற்று 9 மனுக்கள் மற்றும் திட்டத்தை எதிர்த்து 6 மனுக்கள்)

19.12.2020

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**பெருந்துறை**

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**ஈரோடு மாவட்டம்**